ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ ஹ்ரு'தி₃ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ திண்ணன் வீடு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திண்ணன் வீடு ॥

திருமால் பரத்துவத்தை அவதாரத்திலே எடுத்துக் காட்டல்

‡திண்ணன் வீடு⋆ முதல் முழுதுமாய்⋆
    எண்ணின் மீதியன்⋆ எம் பெருமான்⋆
மண்ணும் விண்ணும் எல்லாம்⋆ உடன் உண்ட⋆ நம்
    கண்ணன் கண் அல்லது⋆ இல்லை ஓர் கண்ணே (1)

ஏ பாவம் பரமே⋆ ஏழ் உலகும்⋆
    ஈ பாவம் செய்து⋆ அருளால் அளிப்பாரார்⋆
மா பாவம் விட⋆ அரற்குப் பிச்சை பெய்⋆
    கோபால கோளரி⋆ ஏறன்றியே (2)

ஏறனைப் பூவனைப்⋆ பூமகள் தன்னை⋆
    வேறின்றி விண் தொழத்⋆ தன்னுள் வைத்து⋆
மேல் தன்னை மீதிட⋆ நிமிர்ந்து மண் கொண்ட⋆
    மால் தனில் மிக்கும் ஓர்⋆ தேவும் உளதே (3)

தேவும் எப்பொருளும் படைக்க⋆
    பூவில் நான் முகனைப் படைத்த⋆
தேவன் எம் பெருமானுக்கல்லால்⋆
    பூவும் பூசனையும் தகுமே (4)

தகும் சீர்த்⋆ தன் தனி முதலின் உள்ளே⋆
    மிகுந்தேவும்⋆ எப்பொருளும் படைக்க⋆
தகும் கோலத்⋆ தாமரைக் கண்ணன் எம்மான்⋆
    மிகுஞ்சோதி⋆ மேல் அறிவார் யவரே (5)

யவரும் யாவையும்⋆ எல்லாப் பொருளும்⋆
    கவர்வின்றித்⋆ தன்னுள் ஒடுங்க நின்ற⋆
பவர் கொள் ஞான⋆ வெள்ளச் சுடர் மூர்த்தி⋆
    அவர் எம் ஆழி⋆ அம் பள்ளியாரே (6)

www.prapatti.com

பள்ளி ஆல் இலை⋆ ஏழ் உலகும் கொள்ளும்⋆
வள்ளல்⋆ வல் வயிற்றுப் பெருமான்⋆
உள்ளுளார் அறிவார்⋆ அவன் தன்⋆
கள்ள மாய⋆ மனக்கருத்தே (7)

கருத்தில் தேவும்⋆ எல்லாப் பொருளும்⋆
வருத்தித்த⋆ மாயப் பிரானை அன்றி⋆ ஆரே
திருத்தித்⋆ திண் நிலை மூவுலகும்⋆ தம்முள்
இருத்திக் காக்கும்⋆ இயல்வினரே (8)

காக்கும் இயல்வினன்⋆ கண்ண பெருமான்⋆
சேர்க்கை செய்து⋆ தன் உந்தியுள்ளே⋆
வாய்த்த திசைமுகன்⋆ இந்திரன் வானவர்⋆
ஆக்கினான்⋆ தெய்வ உலகுகளே (9)

கள்வா எம்மையும்⋆ ஏழ் உலகும்⋆ நின்
உள்ளே தோற்றிய⋆ இறைவ! என்று⋆
வெள் ஏறன் நான்முகன்⋆ இந்திரன் வானவர்⋆
புள் ஊர்தி⋆ கழல் பணிந்தேத்துவரே (10)

‡ஏத்த ஏழ் உலகும் கொண்ட⋆ கோலக்
கூத்தனை⋆ குருகூர்ச் சடகோபன் சொல்⋆
வாய்த்த ஆயிரத்துள்⋆ இவை பத்துடன்⋆
ஏத்த வல்லவர்க்கு⋆ இல்லை ஓர் ஊனமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com